**சாட்சிகள் வாக்குமூலம்**
**பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
O.S.119/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.நாகேஸ்வரி (வா.சா.–1) | தொழில் | : | |
| த/பெ.<br>க/பெ. | : | ஜெயராமன் | வயது | : | 65 |
| கிராமம் | : | பழனி | இனம் | : | பெண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | 02.06.2025 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1973 ஆம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10 ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025 ம் ஆண்டு ஜூன் மாதம் 02 ஆம் நாள் அளித்த சாட்சியம்.

வாதி தரப்பு முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை தான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 09.02.2004 ஆம் தேதிய கிரைய ஆவணம் (ஆவண எண்.167/2004) சான்று நகல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 21.09.2021 ஆம் தேதிய பழனி நகராட்சியால் வழங்கப்பட்ட Town Survey Land Register Extract கணிணி நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 30.08.2023 ஆம் தேதிய வீட்டு வரி ரசீது ( 2 எண்ணிக்கை) அசல் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 30.08.2023 ஆம் தேதிய தண்ணீர் வரி ரசீது அசல் வா.சா.ஆ.4 ஆகவும், கடந்த மின் கட்டண ரசீது (2 எண்ணிக்கை) அசல் வா.சா.ஆ.5 ஆகவும், கடந்த 04.10.2013 ஆம் தேதிய இறப்புச் சான்றிதழ் அசல் வா.சா.ஆ.6 ஆகவும், கடந்த 25.06.2022 ஆம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு நகல் வா.சா.ஆ.7 ஆகவும், கடந்த 02.07.2022 வழக்கறிஞருக்கு கொடுத்த பதில் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆகவும், கடந்த 16.03.2022 ஆம் தேதிய பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய கடிதம் அசல் வா.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டன. மேற்படி எனது சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் ஏற்று வாதி கோரிய பரிகாரங்களை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர் என்பதால் குறுக்கு விசாரணை இல்லை.)

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.